திரும்பும்போது மறுபடியும் சுங்கம் செலுத்தக்கூடிய நிலை, ஒரே நாளில் இருமுறை செலுத்தக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இங்கும் 24 மணி நேரம் என்று டைம் கொடுத்து சுங்கம் வசூலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எல்லாப் பாலங்களுக்கும் 24 மணி நேரத்திற்குத்தான் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால், எழுதி அனுப்பினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். இராஜாங்கம் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய 4 பாலங்கள் எந்தெந்த ஆண்டில் கட்டப்பட்டன? எந்த அடிப்படையில் அங்கு சுங்கம் வசூலிக்கப்படுகிறது ? அப்படிக் கட்டுவதற்கு அப்போது மதிப்பீடு தொகை எவ்வளவு ? எந்தக் காரணத்தால் அது வசூலிக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1965-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு பாலம் கட்டுவதற்கு மதிப்பு ரூ. 5 லட்சம் வரை இருக்குமானால் மலைப் பாதைகளுக்குச் சாலை அமைப்பதற்கு சுங்க வரி வசூலிக்கலாம் என்ற கொள்கையிருந்தது. அதற்குப் பிறகு 1965-ம் ஆண்டுக்குப் பிறகு பல வேலைகளுக்கு ரூ. 10 லட்சம் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. மலைப்பகுதி சாலைகளுக்குச் சுங்கம் வசூலிக்கவேண்டாம், தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தும் வசூலிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. எந்த ஆண்டு கட்டப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தஞ்சாவூரில் இருக்கும் கொள்ளிடம் பாலத்திற்கு ஆன செலவு ரூ. 35 லட்சம். கோவையில் இருக்கும் பள்ளிப்பாளையம் பாலத்திற்கான செலவு ரூ. 13.22 லட்சம். தென்னாற்காட்டில் இருக்கும் பொன்னியாற்றிலிருக்கும் பாலத்திற்கான செலவு ரூ. 14.88 லட்சம். வடாற்காட்டில் இருக்கும் செய்யாற்றுப் பாலத்திற்கான செலவு ரூ. 14.04 லட்சம்.

கோவை மாவட்டத்துக்கு அனல் மின் நிலையம்

* 371 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அனல் மின்விசை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபோது ' இல்லை ' என்று சொன்னார்கள். இப்போது நம் அரசாங்கம் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிப்பது, நிறைய மின்சார பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது என்ற முறையில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தாலும், புதிய தொழிற்சாலைகள் மின்சாரம் வேண்டுமென்று கேட்கிற காரணத்தாலும், எல்லா ஹைட்ரோ ஸ்கீம்களையும்—தண்ணீரைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்து விட்டபடியாலும், இப்படிப்பட்ட தெர்மல் ஸ்டேஷன்களை கோயம்புத்தூரில் இல்லாவிட்டாலும், தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிப்பதற்கான வகையில் நிறைய தெர்மல் ஸ்டேஷன்களை அமைக்க அரசு திட்டங்களை ஏற்படுத்தி செயல்பட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நிறைய அனல் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அனல் மின்சார அமைப்புகள் மிகவும் சக்திவாய்ந்த இயந்திரங்களால் இயங்கப் படுவதாக அறிகிறோம். எண்ணூரில் இருக்கும் அனல் மின்சார நிலையத்தை இந்தச் சட்டமன்றத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர்கள் போய்ப் பார்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எப்போதும் போய்ப் பார்க்கலாம்.

இரவு நேரப் பேருந்துப் பணிகள்

*** 372 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் நள்ளிரவு பஸ்கள் எந்தெந்த ரூட்டுகளில் விடப் படுகின்றன ?